# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

# சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV (நிகழ்நிலை), 2022

## புலமைச் சொத்துச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**எவையேனும் மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. இலங்கையிலுள்ள பிரபல்யமான விளம்பர நிறுவனமொன்றான Trend Designers என்பதில் மஹேல என்பவன் புதுமை வடிவமைப்பாளனொருவனாவான். நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, Trend Designers இனது நிர்வாகமானது மஹேல உட்பட அதன் பல ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டது. அவனது தொழில் விபரணத்திற்கு அமைவாக, விளம்பர நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய இலக்கிய, அருங்கலை அல்லது செவிப்புல கட்புல ஆக்கங்களில் ஈடுபட மஹேல நியமிக்கப்பட்டுள்ளான். மஹேல வீட்டிலிருந்து பணிபுரியும் போது இலங்கையின் உள்நாட்டு சவர்க்கார உற்பத்திகளில் ஒன்றினை விளம்பரப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 15 – 20 நிமிட ஒளிக் காட்சியொன்றினை உருவாக்குவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு படைப்புக் கதையொன்றினை உருவாக்கினான். அதனை YouTube அடிப்படையிலான விளம்பர நிகழ்சிகளை உருவாக்குவதில் முக்கியமாக ஈடுபடும் சுயாதீன தயாரிப்பாளரொருவருக்குக் கணிசமானதொரு தொகைக்கு வேறொரு விளம்பர நிகழ்சிக்குப் பயன்படுத்துவதற்கு மஹேல அதிகாரமளித்தான். அக்கதையினை உருவாக்கும் போது, அந்நிறுவனத்தினால் அவனுக்கு வழங்கப்பட்ட மடிக்கணனியைப் பயன்படுத்திச் செவிப்புல கட்புல ஆக்கத்தினை உருவாக்கும் போது எந்தவொரு தயாரிப்பாளருக்கும் பயன்பட மற்றும் வழிகாட்டக்கூடியதான கதையினது சில ஓவியங்களை மஹேல உருவாக்கினான். குறித்த தயாரிப்பாளரால் மூலக்கதையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டதன் பின்னர், தற்போது அது கவர்சிகரமான செவிப்புல கட்புல ஆக்கமாக உருவாக்கப்பட்டு YouTube இல் பிரபல்யமாகி வருகின்றது.

   வீட்டிலிருந்து பணிபுரியும் இக்காலப்பகுதியில் மஹேல சில சிறுகதைகளையும் எழுதியிருக்கின்றான். இலங்கையின் வெளியீட்டு நிறுவனமொன்றான விதுர வெளியீட்டாளர் அக்கதைகளை தமது வரவிருக்கும் வெளியீட்டில் பிரசுரிக்க விரும்புகின்றது. மஹேல அக்கதைகளைப் பிரசுரிக்க அவ் வெளியீட்டாளர்களுக்கு அதிகாரம் வழங்குகின்றான்.

   வீட்டிலிருந்து வேலைசெய்யும் காலப்பகுதியில் மஹேவினால் உருவாக்கப்பட்ட இரு ஆக்கங்களுக்குமான பதிப்புரிமையை Trend Designers கோருகின்றது.

தரப்பட்ட சூழ்நிலையில் காணப்படும் சட்டச்சிக்கல்களை அடையாளம் கண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

2. இலங்கையின் நன்கு அறியப்பட்ட மருந்து ஆராய்ச்சி நிறுவனமொன்றான Rubi Pharmaceuticals Ltd இனது இருதயவியல் ஆராய்ச்சிப் பிரிவில் முழுநேர ஊழியராகப் பணிபுரியும் Dr. மாயா என்பவர் விஞ்ஞானியொருவராவார். நீண்டகால ஆராய்ச்சியின் விளைவாகச், சில இரசாயன மூலகங்கள் மற்றும் *'மொனரா மால்'* மற்றும் *'ஹீன் போவிட்டா'* தாவரங்களின் இயற்கை மூலங்களை உள்ளடக்கியதான சடுதியான மாரடைப்பு, இருதயத் தசை நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றிற்கு உடனடி மருத்தாகப் பயன்படுத்தக்கூடிய மெல்லக்கூடிய மருந்துவில்லையொன்றினை அவர் கண்டுபிடித்தார். அம்மெல்லக் கூடிய மருந்துவில்லைக்கு Bovitol என ஏற்கனவே அவர் பெயரிட்டிருக்கிறார். Bovitol இனது செயற்திறனானது தற்போது சந்தையில் கிடைக்கும் வேறு எந்த மருந்துடனும் ஒப்பிடமுடியாததாகும். மேலும், பல மருத்துவ பரிசோதனைகளில் மருத்துவர்கள் அதன் செயற்திறனைக் கண்டு வியந்துள்ளனர். Bovitol ஆனது உலகின் முழு மருத்துவத் துறையிலும் ஒரு முக்கிய திருப்புமுனையொன்றாகுமெனவும் அது உலகெங்கிலும் உள்ள பல நோயாளர்களின் உயிர்வாழும் விகிதத்தினை அதிகரிக்கும் என்றும் சில மருத்துவ வல்லுனர்கள் கருதுகின்றார்கள். அவ்வாராய்ச்சியின் குறிப்பிடத்தக்க விளைவுகளின் முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்த Rubi Pharmaceuticals Ltd இனது இயக்குனர் குழாமானது அவருக்கு தொடர்ந்துவரும் நான்கு ஆண்டுகளுக்கு விஷேட ஆராய்ச்சிக் கொடுப்பனவொன்றினை வழங்குவதற்குத் தீர்மானித்தது. Dr. மாயா இலங்கையில் தனது கண்டுபிடிப்பிற்கான ஆக்கவுரிமைப் பாதுகாப்பினைப் பெறுவதற்கு தற்போது விரும்புகின்றார். எனினும், Rubi Pharmaceuticals Ltd தனக்கு கண்டுபிடிப்பிற்கான ஆக்கவுரிமையைக் கோருவதற்கு உரிமையுள்ளதென வாதிடுகின்றது. மறுபுறம் இலங்கையின் மருத்துவர்களுடனான அண்மைய கூட்டத்தில் மக்கள் மருந்துகள் மலிவான விலையில் அணுகுவதை உறுதிப்படுத்துவதன் அவசியத்தினைச் சுகாதார அமைச்சினது அதிகாரிகள் வலியுறுத்தினார்கள்.

மேற்குறிப்பிட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. உம்மை இலங்கையின் முன்னணியான அக்கவுரிமை வழக்கறிஞரொருவரெனவும் Dr. மாயா உம்மை அணுகியுள்ளாளெனவும் கருதுக. பதிவுசெய்தல் செயற்பாட்டில் அவர் எதிர்கொள்ளக்கூடிய சாத்தியமான சட்டத்தடைகளை மேற்கொடிட்டு இலங்கையின் புலமைச்சொத்துச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகளின் அடிப்படையில் அவரது கண்டுபிடிப்பிற்பான ஆக்கவுரிமைகாண் தகுதி பற்றி ஆலோசனை வழங்குக.

(60 புள்ளிகள்)

ii. பல்தெசியக் கம்பனியொன்றான Orlando Group ஆனது அக்கண்டுபிடிப்பினை உலகம் முழுவதும் வணிகமயமாக்கவும் Bovitol மருந்து வில்லைகளைப் பெரிய அளவில் தயாரிக்கவும் விரும்புகின்றது. *ஹீன் போவிட்டாவானது* இலங்கையின் சுதேசிய தாவரமொன்றாகும் என்பதுடன் உலகில் மிகவும் அரிதாகிவருகின்ற தாவரங்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. Orlando Group இனால் நியமிக்கப்பட்ட சட்ட ஆலோசகரென உம்மைக் கருதுக. Bovitol மருந்து வில்லைகளை வணிகமயமாக்குவதற்கான முன்நிபந்தனைகளை அடையாளம் கண்டுகொள்வதற்கும், அமெரிக்காவில் அமைந்துள்ள தமது சொந்த தொழிற்சாலையில் Bovitol மருந்து வில்லைகளை உற்பத்தி செய்யும் போது, அவற்றை உலகம் முழுவதும் வணிகமயமாக்குவதற்கு ஏதேனும் தடை உள்ளதா என்பதனைக் தீர்மானிப்பதற்கும் Orlando Group இற்கு உதவுக.

(40 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

3. **அ மற்றும் ஆ** ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

அ. இலங்கையின் தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தினைச் சேர்ந்த வர்த்தகக்குறிப் பரிசோதகரென உம்மைக் கருதுக. உம்மால் பெறப்பட்ட பின்வரும் விண்ணப்பங்களின் பதிவார்ந்தன்மை குறித்து நியாயத்துடன் கூடியதான உமது கருத்தினைத் தருக:

i. கைத்தொலைபேசிகள் மற்றும் tablet கணனிகளுக்கு ''SUNSUN' எனும் சொல்லினை உள்ளடக்கிய குறியொன்றினைப் பதிவுசெய்வதற்காக சச்சினி என்பவளால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டது. இருப்பினும், SUNSUN என்ற உலகப் பிரசித்தி பெற்ற வர்த்தகத் தரத்தினைச் சொந்தமாகக் கொண்ட தயாரிப்புக்கள் இலங்கையில் நீண்டகாலமாக விற்கப்பட்டுவருகின்றது, SUNSUN குறியினைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்று இன்னும் தாக்கல்செய்யப்பட்டிருக்கவில்லை

ஆடை உற்பத்திப் பொருட்களுக்கு SANSUN குறியினை பதிவுசெய்வற்கு சச்சினி முயன்றால் உமது விடை வேறுபடுமா?

(30 புள்ளிகள்)

ii. குழந்தைகளுக்கான சவர்க்கார உற்பத்தியொன்றினைப் பதிவுசெய்வதற்காக 'BABY-SOFT' எனும் குறியானது திஹான் என்பவனால் விண்ணப்பம் செய்ப்பட்டது.

(20 புள்ளிகள்)

ஆ. ரொயர் என்பவன் TEZQUELLA FOOD என்ற பதிவுசெய்யப்பட்ட குறியொன்றின் உரிமையாளராவான். 2015ம் ஆண்டிலிருந்து இலங்கையில் உணவு விநியோகச்சேவையொன்று தொடர்பாக குறித்த குறியினை அவன் பயன்படுத்தி

வருகின்றான். மிஹின் இந்த ஆண்டின் ஜனவரியில் TEZQUILLO FOOD எனும் குறியுடன் ஒரு உணவக சேவையொன்றினை நடாத்த ஆரம்பித்தான். இலங்கையின் ஏற்புடையதாகும் சட்டங்களைத் தொடர்புறுத்தி ரொயர் என்பவனுக்கு கிடைக்கக்கூடிய உரிமைகள் மற்றும் நிவாரணங்களை ஆராய்க.

(50 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

4. 'ஆக்கவுரிமைச்சட்டம் மற்றும் வர்த்தக இரகசியங்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் அகியவை சில வகையான கண்டுபிடிப்புக்களைப் பாதுகாப்பதற்கான மாற்றுச் சட்ட அமைப்புக்களாகக் கருதப்படுகின்றன. இதன் விளைவாக, கண்டுபிடிப்பாளரொருவர் பெரும்பாலும் தங்கியிருக்க வேண்டிய பாதுகாப்பின் வகைகளுக்கு இடையில் தெரிவு அல்லது தேர்வொன்றினை எப்பொழுதும் செய்யவேண்டியிருக்கும். 2003ம் ஆண்டின் 36ம் இலக்க புலமைச்சொத்துச் சட்டமானது வெளிப்படுத்தப்படாத தகவல்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குகின்றது. இருப்பினும், பொதுச்சட்ட நிவாரணங்களானவை நியதிச்சட்ட ஏற்பாடுகளினால் பாதிப்பிற்கு உள்ளாகவில்லை.'

பொருத்தமான சட்டக்கோட்பாடுகள், நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குத் தீர்ப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் மேற்போந்த கூற்றினை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. உமது பகுப்பாய்வானது வர்த்தக இரகசியங்களிற்கு ஏற்புடையதாகும் இலங்கையின் சட்ட அமைப்பு, சர்வதேச கடப்பாடுகள், சவால்கள், வாய்ப்புக்கள் மற்றும் சட்டச்சீர்திருத்தங்கள் ஏதுமிருப்பின் அதற்கான பரிந்துரைகள் என்பவற்றில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

(100 புள்ளிகள்)

5. **அ மற்றும் ஆ** ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக

அ. சிறுவர்களினது விளையாட்டுப் பொருட்களை வடிவமைத்துத் தயாரிக்கும் Kiddies Rovella என்றழைக்கப்படும் நிறுவனத்தில் விளையாட்டுப் பொருள் வடிவமைப்பாளனொருவனாக நிக்கொலஸ் பணியாற்றுகின்றான். செங்கல்லின் (toy brick) இதழ் முகங்களில் இணைக்கும் முனை வரிசைகளைக் கொண்டுள்ள தாமரை வடிவிலான விளையாட்டுச் செங்கலொன்றினை (a building block) நிக்கொலஸ் உருவாக்கினான். அவ்விணைக்கும் முனைகள் உருளை வடிவத்தினைக் கொண்டுள்ளதுடன், அத்தொகுப்பின் மற்றைய செங்கற்களுடன் சேரக்கூடியதான அதன் திறனை உறுதிசெய்வதற்கு அவ்வாறானதொரு வடிவம் அவசியமானதாகும்.

2003ம் ஆண்டின் 36ம் இலக்க புலமைச்சொத்துச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கைத்தொழில் வடிவமைப்பொன்றாக அச்செங்கல் வடிவ விளையாட்டுப்பொருளினை பதிவுசெய்காண்தன்மை தொடர்பாக Kiddies Rovella இற்கு ஆலோசனை வழங்குக.

(50 புள்ளிகள்)

ஆ. தற்போதுள்ள புலமைச் சொத்து தொடர்பான சர்வதேச சட்ட ஆவணங்கள் தேசிய சட்டக்கட்டமைப்புக்களை முன்னிறுத்தக்கூடிய அடிப்படைக் கொள்கைகளிள் முக்கியமான மூலங்களை வழங்குகின்றன.

**கைத்தொழில் வடிவமைப்புக்களுக்கு** ஏற்புடையதாகும் சர்வதேச சட்ட ஆவணங்களைத் தொடர்புறுத்தி இக்கூற்றினை ஆராய்க

(50 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

6. **அ மற்றும் ஆ** ஆகிய **இரண்டிற்கும்** விடை தருக.

அ.இலங்கையின் சமகால நுகர்வோர் நலமன்றம் 2022 இல் ஆய்வுக்கட்டுரையொன்றினைச் சமர்ப்பிப்பதற்காக நீர் அழைக்கப்பட்டுள்ளீரெனக் கருதுக. உமது ஆய்வுக் கட்டுரைக்கான தலைப்பானது 'இலங்கையின் சட்டமுறைமையில் வணிகப்போலி நடைவடிக்கையின் (passing-off action) வகிபங்கானது நியாயமற்ற போட்டிக்கு எதிரான பாதுகாப்பினால் தவிர்க்க முடியாதவகையில் குறைந்துள்ளது'

உமது விளக்கவுரையானது மேற்கூறப்பட்ட சட்டப்பகுதிகளை ஏற்புடைமை செய்யும் இலங்கையின் சட்ட அமைப்பினது பின்னணி, பரப்பெல்லை, விஷேட அம்சங்கள், பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றில் கவனம்செலுத்தியிருத்தல் வேண்டும். தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் தொடர்புறுத்தி உமது கட்டுரையை வரைக.

(70 புள்ளிகள்)

ஆ. 'புவியியற் குறியீகளின் Geographical Indications (GIs) பாதுகாப்பின் பின்ணனியானது மற்றைய புலமைச்சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு ஒப்பானதாகுமென்பதுடன் அறிவு அல்லது தகவல் என்னும் பொது நற்சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டதும் நற்பெயரை எந்தவித கொடுப்பனவுமிற்றி இலவசமாகக் கையகப்படுத்துவதனால் (free riding) ஏற்படும் தீங்கினை அடிப்படையாகக் கொண்டதாகும்.'

நீர் உடன்படுகின்றீரா? புவியியற் குறியீடுகளின் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் பின்னணி தொடர்பில் மேற்போந்த கூற்றினைச் சுருக்கமாக மதிப்பிடுக. உமது விடையினை பொருத்தமான சட்டக்கோட்பாடுகள் மற்றும் உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

(30 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

************************